**அம்பாறை நகர சபை - 2023**

**--------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுமற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 18(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நகர சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நகர சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானம் ரூபா 702,818 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடை வாடகை பட்டோலைகளின் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான கடை வாடகை தண்டப் பணம் ரூபா 1,363,009 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குளைத் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை நிலுவை வருமானம் ரூபா 1,630,817 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீண்டும் ஆராய்ந்து பார்த்து வித்தியாசம் உள்ளது என உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால் அடுத்துவரும் நிதிக் கூற்றில் அது சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பண நிலுவை மீதி ரூபா 3,318,250 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 303,642 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | வருடாந்தம் அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் (AIP) -2023 கீழ் நிறைவேற்றப்பட்ட 03 செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 1,389,540 பெறுமதி நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக்களின் பெறுமதி ரூபா 277,633 குறைத்து காட்டப்பட்டிருந்தது | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டு தொடர்பாக வாடி வீடுகளின் ஆரம்ப மற்றும் இறுதி இருப்புக்கள் செம்மையாக்கப்பட்டு விற்பனைக் கிரயம் ரூபா 31,491,728 தொகை வருமான செலவு கணக்கில் காட்டப்பட வேண்டிய போதிலும் கொள்வனவுக் கிரயம் ரூபா 32,054,955 ஆகக் காட்டியதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 563,227 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுகள் தொடர்பாக மீண்டும் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். சரிசெய்தல்கள் இருக்குமாயின் அது 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாக விருந்த வீத வரிகளின் பெறுமதிக்கும் வீதவரி நிலுவை மீதி பட்டோலைகளின் மொத்த பெறுமதிக்குமிடையே ரூபா 2,853,229 இணக்கமின்மைகள் காணப்பட்டன. | வீதவரி தரவு முறைமை மற்றும் தொடர்புபட்ட நிறுவனத்தினால் தவறுகளை சரிசெய்ததன் பின்னர் சரியான மீதியை அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | சரியான மீதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பொழிப்பு செலவு பதிவேட்டின் பிரகாரம் கொள்வனவுப் பெறுமதிக்கும் வணிக கணக்கின் கொள்வனவுப் பெறுமதிக்குமிடையே ரூபா 643,536 இணக்கமின்மை காணப்பட்டது. | மீண்டும் ஆராய்ந்து பார்த்து ஏதாவது வித்தியாசம் உள்ளது என உறுதிப்படுத்தப்படுமாகவிருந்தால் அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கில் சரிசெய்யப்படும் | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூல சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 17,663,561 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(ii) பட்டோலை | ஆரம்ப மீதி சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து தொகை மதிப்பு செய்யப்பட வேண்டியதுடன் அதற்கு சில காலம் எடுக்கும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலை வைப்பு | 968,481 | (i) செலுத்த வேண்டிய தரப்பின்ர்களை அடையாளங்காணும் பட்டோலை | இந்த மீதி 2019 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் மீதியானதுடன் மேலதிக நடவடிக்கைகளை கொள்கை குழு திர்மானத்தின் அடிப்படையில் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (இ) | பெறுமதி சேர் வரி வைப்பு<br>வரி | 3,106,386<br>39,657 | (i) பதிவேடு<br>(ii) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | இது சம்பந்தமாக விசேடமாக ஆராய்ந்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் நிலுவையிலுள்ள வாடகைக் கணக்கின் நிலுவைத் தொகை 2023 ஜனவரி 01 ஆந் திகதியில் திரண்ட நிதியில் வரவு வைக்கப்பட்டது. | 1,626,640 | பதிவழிப்பதற்கான காரணங்கள் தொடர்பான தகவல்கள் | முறையான ஆய்வினை மேற்கொண்டு வித்தியாசம் காணப்படுமாயின் அதனை 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காரணத்தை அடையாளங் கண்டு அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர் வாடகை வருமானம் பதிவழிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (215 ஆம் அத்தியாயம்) 170 ஆம் பிரிவு | நகரசபையின் ஆதனங்களுக்காக அறவிட வேண்டிய நிலுவையான வீதவரி மற்றும் நகரசபையின் ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதன் மூலம் அறவிட வேண்டிய வாடகைப் பணமான ரூபா 51,094,421 பெறுமதியை அறவீடு செய்வதற்காக ஆதனங்களை தடைசெய்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதற்கு நகரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான வீத வரிகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் நகரசபையின் 23 கடைகள் சீல் வைக்கப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது | நகர சபை அதிகாரசட்டத்தி லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | நகர சபையின் காசாளர், பணம் மற்றும் காசோலைகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர்கள் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான பரிசோதகர்கள் | கணக்காய்வு வெளிப்படுத்தல்களுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலியவாறான பணம் மற்றும் சொத்துக்களுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை** | | | |
| (i) அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட 2023 மே 12 ஆந் திகதிய 02/2021 (VIII) ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| • 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பிரிவு | 2023 மே 15 ஆந் திகதியிலிருந்து சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் அதன் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப்படிகள் மற்றும் விடுமுறை தினச் சம்பளங்கள் முதலிய நிரந்தர கடமை நேரங்களின் பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக காலம் அடிப்படையாகக் கொள்ளப்படுமாயின் அக்காலமானது விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட | பதில் கடமை பார்க்கும் கணக்காளருக்கு பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க உரிய உத்தியோகத்தர் தற்பொழுத விரல் அடையளமிடும் இயந்திரத்தினை பயன்படுத்தி வருகை மற்றும் வெளிச்செல்லல் அடையாளமிடப்படுகின்றது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நகரசபையில் பதில் கடமை பார்க்கும் கணக்காளருக்கு 2023 மே மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக விடுமுறை தினச் சம்பளமாக ரூபா 46,096 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2016 திசெம்பரி 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை யின் 03 ஆம் பந்தி | வாகன எரிபொருள் நுகர்வினைப் பரீட்சித்தல் 12 மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நகர சபையின் பயன்படுத்தும் நிலையில் காணப்படுகின்ற 15 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 10,008,803 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 13,522,976 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாட்டுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நகர சபையின் மூன்று வங்கி கணக்குகளின் ரூபா 16,911,069 பணம் ஒதுக்கமாகக் காணப்பட்டிருந்ததுடன் அந்த மிகைப் பணத்திலிருந்து 2023 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான வருமானத்தை உழைக்கக்கூடிய மூலங்களில் முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கு | வாடி வீட்டின் வங்கி கணக்கின் ரூபா 11,862,232 ஆக அதிக அளவான சேமிப்பு காட்டப்படுகின்றது. வாடி வீட்டினை தனியார் நிறுவன மற்றும் போட்டியான மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய கணக்கில் இப்பணம் | மிகைப் பணத்தை முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேகரித்து வைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீத வரியும் வரியும் | 11,700,000 | 10,341,122 | 7,786,972 | 37,875,918 | 10,800,000 | 8,872,372 | 6,504,958 | 35,321,768 |
| ii. | வாடகை | 12,453,126 | 9,617,823 | 8,574,559 | 13,218,503 | 11,528,226 | 8,920,981 | 4,744,811 | 12,175,239 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 3,302,000 | 1,475,065 | 1,475,065 | – | 3,702,000 | 1,635,448 | 1,635,447 | – |
| iv. | ஏனைய வருமானம் | 76,502,580 | 68,974,836 | 68,974,836 | – | 63,528,806 | 41,520,104 | 41,520,104 | – |
| மொத்தம் | | 103,957,706 | 90,408,846 | 86,811,432 | 51,094,421 | 89,558,806 | 60,948,905 | 54,405,320 | 47,497,007 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டியிருந்த வீதவரி பணம் ரூபா 37,875,918 ஆக இருந்ததுடன் அது வருடாந்தம் அறவிட வேண்டிய மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைப் போல நான்கு மடங்கு அதிகரித்த பெறுமதியாகும். | நடமாடும் சேவைகள் மற்றும் வலய மட்டத்தில் வீடுகளுக்குச் சென்று வீதவரிப் பணத்தை சேகரிக்கும் செயற்பாடு தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவையான வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 21 ஆந் திகதி வரையான நிலுவை கடை வாடகை மீதி தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் | நிலுவையான கடை வாடகை மீதிகள் காட்டப்பட்டுள்ள பணத்தின் சரியானதன்மை தொடர்பாக சிக்கலான நிலைமை உருவாகியுள்ளது. | நிலுவை மீதியை தீர்த்துவைத்துக் கொள்வதற்கு மற்றும் நிலுவைப் பணத்தை அறவீடு |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு நிலுவையான கடை வாடகை மீதி ரூபா 17,218,503 ஆகும். | சரியான தன்மை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஏதாவது வித்தியாசம் இடம்பெற்றிருக்குமாகவிருந்தால் அதனை 2024 இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் அடையாளங்கண்டு உப நியதிச்சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | உப நியதிச்சட்டத்தினை அங்கீகரித்துக்கொள்ளும் நடைமுறைச் சிக்கல் காணப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சினால் பொதுவான உப நியதிச்சட்ட தொகுப்பினை தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை சட்டமாக்குதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நகர சபையினால் 2023 ஆம் ஆண்டில் மாதாந்தம் 200 தொன் உக்குகின்ற கழிவுப் பொருட்களும் 100 தொன் உக்காத கழிவுப் பொருட்களுமாக வருடாந்தம் 3,600 தொன்கள் அளவானவை ரூபா 5,596,364 செலவு செய்து சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டில் 7,562 கிலோ கிராம் சேதனப் பசளைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்ததன் மூலம் ரூபா 151,233 வருமானம் மாத்தீரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பொதுமக்கள் வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுதல் படிப்படியாக குறைவடைந்ததன் மூலம் சேதனப் பசளை விற்பனையும் குறைவடைகின்றது. | சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தினைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நகர சபையின் 166 கடைகளில் 163 கடைகளின் செல்லுபடியாகும் உடன்படிக்கை காலத்தினை மிகைத்து 03 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தும் அக்கடைகளை மீண்டும் கேள்வி கோரி உடன்படிக்கை செய்துகொள்வதற்கு நகரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு உரிய உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையினை காலரீதியாக புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள அனைத்து வணிக வியாபார மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பாக மீளாய்வினை முறைப்படியாக நடாத்தி பட்டியலினைத் தயாரித்து மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பிப்பதற்கும் அத்தகவல்களை ஆவணப்படுத்தி கட்டணங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணத்தை தயாரித்து உரிய நிலுவைப் பணத்துடன் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீளாய்வினை நடாத்தி அனைத்து நிறுவனங்களிடமிரு ந்தும் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் நிலுவை வருமானத்தை அடையாளங் காணப்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்பாறை பொதுப் பூங்காவில் அமைந்துள்ள பழைய கட்டிடங்களை புனரமைப்புச் செய்ததன் பின்னர் விழா, கருத்தரங்கு மற்றும் கூட்டங்களை நடாத்துவதற்காக வாடகைக்கு வழங்குவதன் மூலம் நகரசபையின் வருமான மட்டத்தினை அதிகரிக்கும் குறிக்கோளில் அம்பாறை பொதுப் பூங்காவிற்காக ரூபா 2,445,535 செலவு செய்து 2023 யூன் மாதத்தில் உரிய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அப்பொருட்கள் 2024 சனவரி 04 கணக்காய்வுத் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கெர்ளாது களஞ்சியப்படுத்தி காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் அம்பாறை பொதுப் பூங்காவில் அமைந்துள்ள கட்டிடத்தினை நவீனமயப்படுத்துவதற்கு முன்னர் இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்தும் அவற்றின் உத்தரவாத காலத்தில் 07 மாதங்கள் தற்பொழுது மிகைத்திருந்தன. | 2023 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் உரிய செயற்திட்டத்திற்காக கட்டுநிதியை தாமதமின்றி பெற்றுக்கொள்ளும் குறிக்கோளின் காரணமாக மேற்கூறிய பொருட்களை துரிதமாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருட்களின் உத்தரவாத கால எல்லையில் குறிப்பிடத்தக்க அளவான காலம் தற்பொழுது கடந்துள்ளது. | உத்தரவாத காலம் மிகைத்துள்ளத னால் பொருட்களை பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நகரசபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஆதனங்கள் மீது 2005 ஆம் ஆண்டில் அதாவது 18 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | தற்பொழுது மதிப்பீட்டு நடவடிக்கையானது மதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிகவும் அண்மைக் காலத்தில் உரிய மதிப்பீட்டு நடவடிக்கை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய காலத்தில் மதிப்பீட்டினை மேற்கொண்டு குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நகர சபையின் 141 கடைகளிலிருந்து 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு | கடிதங்களில் மூலம் வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது உரிய | உரிய காலத்தில் மதிப்பீட்டினை மேற்கொண்டு வாடகைப் |

| | | |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது கடை வாடகைகள் அறவிடப்பட்டிருந்தன. | மதிப்பீட்டுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கிடைத்து வருகின்றது. | பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நகரசபையில் காணப்படுகின்ற திருத்தம் செய்யக்கூடிய நிலையில் உள்ள 10 வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன. | நகரசபையின் திருத்தம் செய்யக்கூடிய நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை எதிர்காலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நகரசபையின் 42 காணிகள் மற்றும் அக்காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு பட்டோலைகள் தயாரிப்பதற்கும் சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதியை உள்ளடக்கி நாளதுவரையாக்கி பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக முறையாக மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு தேவையான தொடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிப்பதுடன அதற்காக சில காலம் எடுக்கும். | பெறுமதியை அடையாளங்கண்டு ஆவணப்படுத்துவதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நகர சபையின் 12 வாகனங்கள் திருத்தம் செய்யக்கூடிய நிலையில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரமாணமாக வாடகைக்கு வழங்கக்கூடிய 05 வாகனங்களிலிருந்து உழைக்க கூடிய வருமானம் நகரசபைக்கு கிடைக்காமல் போயிருந்தது. | திருத்தம் செய்வதற்காக அதிக அளவு பணம் செலவாகும். அதற்கு செலவு செய்யக்கூடிய வருமான நிலைமை சபையிடம் காணப்படவில்லை. | வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | நகரசபையின் பொறுப்பில் காணப்படுகின்ற 19 வாகனங்களின் உரிமையை நகரசபையினால் பொறுப்பேற்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை பொறுப்பேற்கப்படாத வாகனங்களுக்கு எதிர்காலத்தில் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் பெயருக்கு பொறுபேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நகர சபையின் 74 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | இது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் நகர சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கான சிபாரிசுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுக் குழு 2022/2023 ஆண்டுகளில் நியமித்து நிறுவகரீதியான செயற்பாட்டு நடைமுறையினை மேம்படுத்துதல் மற்றும் அலுவலக ரீதியான செயலாற்றிலினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நகரசபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் நிறுவகரீதியான செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கு சிபாரிசுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபித்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு கணக்காய்வு மற்ம் முகாமைத்துவக் குழு நியமிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் கணக்காய்வு அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்து கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை நகர சபையினால் புத்தங்கல வீதி, திஸ்ஸபுர என்ற இடத்தில் பேணப்பட்டு வந்த திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு மத்திய | போதியதல்லாத பௌதீக மற்றும் மனிதவளங்கள் மூலம் இதனைப் பராமரித்தல் மற்றும் முறையாக மேற்கொள்ளுதல் | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தி னைப் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றாடல் அதிகாரசபை யிடமிருந்து செல்லுபடியான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலாவதியாகி 1 ½ ஆண்டுகளக்கு மேற்பட்ட காலம் மிகைத்திருந்தும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாது செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் இல்லாது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் பேணப்பட்டிருந்தது. | மிகவும் சிக்கலான விடயமாகும். சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை பூரணப்படுத்த முடியாததன் காரணமாக தற்பொழுது சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 நவம்பர் 21 கணக்காய்வுத் திகதி வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கை சுற்றாடல் சிபாரிசுகளை மீறிய வகையில திறந்த நிலத்தில் உக்காத கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வந்திருந்தமை, மீள்சுழற்சி செய்யக்கூடிய மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுப் பொருட்களை பிரித்து அப்புறப்படுத்தாமை முதலிய விடயங்களின் காரணமாக அதிகளவு சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பாக நகரசபை துரித கவனம் செலுத்த வேண்டியிருந்தது. | 2023-12-04 ஆந் திகதியிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் உக்குகின்ற/ உக்காதவையாக பிரித்து பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அதற்காக பொதுமக்களுக்கு தெரியப்படுத்ததல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றாடல் சிபாரிசுகளை மீறாத வகையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை பேணுதல் வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினைத் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து அச்செயற்பாடுகள் தற்பொழுது முடிவடைந்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிந்தி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |